பேருந்துகளையும் திருப்பி விட்டார்கள். ஆகவே, மக்கள் அதிகமாக வாழக்கூடிய இந்தப் பகுதியிலிருந்து புறவழிச் சாலைக்கு 1 கி.மீ. அல்லது 1½ கி.மீ. தூரம் வரை நடந்து சென்று, பேருந்தில் ஏற வேண்டியிருக்கின்றது. இது சமீபத்தில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை. ஏற்கெனவே அந்த பூந்தமல்லி சாலையை அகலப்படுத்துவதற்கான குறியீடுகள் செய்யப்பட்டுவிட்டன. மார்க்கிங் செய்யப்பட்டுவிட்டன. சாலையினை அகலப்படுத்தினால் இந்தப் பிரச்சினை தீரும். எனவே, இச்சாலையினை அகலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட சாலையானது குறுகலாகவும், போக்குவரத்து நெரிசல் நிறைந்ததாகவும் இருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஆய்வு செய்து, போக்குவரத்து செறிவின் அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 347, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

347—

அங்கன்வாடிக் கட்டடம்

***57774—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, நெய்யூர் பேரூராட்சி, சேனம்விளையிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, நெய்யூர் பேரூராட்சி, சேனம்விளையிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்ததன் காரணமாகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்குத் தயார் நிலையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் மாவட்டத்தினுடைய திட்ட அலுவலர் அவர்கள் மூன்று, நான்கு முறை தொடர்புகொண்டு அந்தக் கட்டடத்தினைத் திறந்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவருக்குப் போதிய நேரம் ஒதுக்காத காரணத்தினால் காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நிதியிலிருந்து கட்டப்பட்டிருக்கின்ற காரணத்தினால் அந்தக் கட்டடத்தினை, வெகு விரைவில் திறந்து வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நான் ஏற்கெனவே கேட்ட கேள்வி. அதற்குப் பிறகுதான் அந்தக் கட்டடம் கட்டப்பட்டது. எனவே, அதனைக் கூடிய சீக்கிரம் திறந்து வைப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதிக்குட்பட்ட நெய்யூர் பேரூராட்சியில் இலந்தவிளைப் பகுதியில் அங்கன்வாடி மையக் கட்டடம் ஆபத்தான நிலையில் இருக்கின்றது. மேலும், மண்டைக்காடு பேரூராட்சியில் அழகம்பாறை பகுதியில் அங்கன்வாடி மையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. எனவே, இப்பகுதிகளில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கன்வாடிப் பிள்ளைகளுக்குத் தற்போது வாரத்திற்கு மூன்று நாட்கள் அரசின்மூலம் முட்டை வழங்கப்படுகின்றது. நாம் அங்கன்வாடிக்குச் சென்று பார்த்தால் தெரியும். அந்தப் பிள்ளைகள் முட்டையில் உள்ள மஞ்சள் கருவினை அப்படியே தேய்த்து வைத்திருப்பது, பெயிண்ட் அடித்து வைத்திருப்பதுபோல் இருக்கும். பிள்ளைகளுக்கு முட்டை நல்லதுதான். மூன்று நாட்கள் முட்டை வழங்குவதில் மாற்றத்தினைக் கொண்டுவந்து, ஒரு நாள் அந்தப் பிள்ளைகளுக்கு ஆப்பிள் வழங்கினால் மிகவும் நன்றாக இருக்கும். இது குழந்தைகளுக்கு நல்ல ஊட்டச் சத்து அளிக்கும். இது குழந்தைகளின் படிப்பிற்கும், ஆரோக்கியத்திற்கும் நன்றாக இருக்கும். அதற்கு அரசு முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையம் திறப்பதில் ஆரம்பித்து ஆப்பிளில் போய் நிற்கிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் 15,313 அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் படிப்படியாகக் கட்டுவதற்கு ரூ.601 கோடியே 91 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டதன் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிற மையங்களின் எண்ணிக்கை 202 ஆகும். இதில் 190 அங்கன்வாடி மையக் கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 12 மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற அந்த அங்கன்வாடி மையங்களும் இதில் அடங்கும். அவற்றையும் புதிதாகக் கட்டுவதற்கு தீவிரமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், குளச்சல் தொகுதியில் மட்டும் 23 அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டு அதுவும் நடவடிக்கையில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

முற்பகல் 10–55

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடிகளில் ஆப்பிள் கொடுப்பதற்குப் பரிசிலனை செய்ய வேண்டுமென்ற கேள்வியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். ஆப்பிள் இல்லையென்றால் பால் அல்லது பழம் கொடுக்கலாம். எங்கள் ஊரில் ஏத்தன்பழம் என்று சொல்வார்கள் அந்தப் பழம் நிரம்ப சத்தானது. அதையாவது கொடுத்து அங்கன்வாடிப் பிள்ளைகளின் ஆரோக்கியத்தை வலுப்படுத்துவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று மீண்டும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளின் ஆரோக்கியத்தையும், ஊட்டச்சத்தையும் மேம்படுத்துவதற்காகத்தான் முட்டை வழங்கப்படுகிறது. அதிலும்கூட, முட்டை சாப்பிடாத பிள்ளைகளுக்கு இப்போது வாழைப்பழம் வழங்கப்பட்டுக் கொண்டுதான் வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாகச் சொல்லியிருக்கின்ற கருத்துக்கு பதில் வழங்கும் நிலை எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 348, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*